செய்தி வெளியீடு எண்: 363 நாள்: 05.06.2018

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று (5.6.2018) தலைமைச் செயலகத்தில், விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை அமைத்து 1.6.2018 அன்று மத்திய அரசின் அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுத்தமைக்காக நன்றி தெரிவித்தார்கள்.

தமிழ்நாட்டின் விவசாயத்திற்கு ஆதாரமாக விளங்கும் காவேரி நதி நீரை பகிர்ந்து கொள்வதில், தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திற்கும் இடையே நீண்ட காலமாக பிரச்சனை நிலவி வருகிறது. தமிழ்நாடு காவேரி நீர்ப் பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தினர் 18.11.1983—அன்று உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது, தமிழ்நாடு அரசு 1986—ல் தன்னையும் இணைத்துக் கொண்டு நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தை வலியுறுத்தியது.

**காவேரி டெல்டா விவசாயிகளின் உரிமையை நிலை நாட்ட 1993 ஆம் வருடம் மெரினா கடற்கரையில் தொடர்ந்து 80 மணி நேரத்திற்கும் மேலாக உண்ணா விரதம் இருந்து போராடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தியாகத்தை தமிழ்நாட்டு மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளாலும், சட்டப் போராட்டத்தினாலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் 19.2.2013 அன்று வெளியிடப்பட்டு செயலாக்கத்திற்கு வந்தது. இந்த இறுதி ஆணையை, திறம்பட செயல்படுத்தி மாநிலங்களுக்குரிய பங்கு நீரினை உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏதுவாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர்முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் காவேரி நடுவர் மன்றம் பரிந்துரை செய்தது. அச்சமயம், பல்வேறு விவசாய சங்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் பல வருட போராட்டங்கள் நடத்தி, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட்டமைக்காக, 9.3.2013 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒரு மாபெரும் வெற்றி விழா எடுத்து பாராட்டியதோடு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு **'பொன்னியின் செல்வி'** என்ற பட்டத்தையும் வழங்கி சிறப்பித்தனர்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும், மத்திய அரசையும்,

அனைத்து அதிகாரங்களையும் கொண்ட இந்த இரண்டு அமைப்புகளை அமைக்க வேண்டி தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. இதனைத் தொடர்ந்து, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு மாநில அரசுகள் தாக்கல் செய்த சிவில் மேல் முறையீட்டு வழக்குகளில், உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று இறுதியாக தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பின்படி ஒரு செயலாக்க திட்டத்தை மத்திய அரசு 6 வார காலத்திற்குள் அமைக்க வேண்டுமெனவும், காலக்கெடு ஏதும் நீட்டிக்கப்பட மாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

உச்ச நீதிமன்றம் தெரிவித்த கால கெடுவுக்குள் இவ்விரு அமைப்புகளை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததால், தமிழ்நாடு அரசால் 31.3.2018 அன்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.

இதனை அடுத்து, உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி, 1.6.2018 அன்று காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் மத்திய அரசால் அமைக்கப்பட்டு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அம்மாவின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசும், மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளாலும், சட்ட போராட்டங்களாலும், காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைத்து அதனை மத்திய அரசிதழில் 1.6.2018 அன்று வெளியிட்டது. இது தமிழ்நாடு அரசிற்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இந்த உத்தரவுகளினால், தமிழ்நாட்டின் உரிமைகள் மற்றும் விவசாயப் பெருங்குடிமக்களின் வாழ்வாதாரம் மீட்டு எடுக்கப்பட்டுள்ளது.**

**காவேரி நதிநீர் பிரச்னையில் இருந்து வந்த நீண்ட நெடிய போராட்டத்தை சட்டத்தின் வழி நின்று நிரந்தர தீர்வு கண்டமைக்காகவும், தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டு எடுத்தமைக்காகவும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியினை நேரில் தெரிவிக்க,** தமிழ்நாடு காவேரி நீர்பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்பு சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.காவேரி எஸ். ரெங்கநாதன் மற்றும் தலைவர் திரு.வி. ராஜாராமன், தமிழக விவசாயிகள் சங்கத்தின் திருவாரூர் மாவட்ட தலைவர் திரு.பயரி எஸ். கிருஷ்ணமணி, காவேரி டெல்டா விவசாயிகள் குழுமத்தின் பொது செயலாளர் திரு.வெ. சத்யநாராயணன், தமிழக இயற்கை உழவர் இயக்கத்தின் மாநில பொது செயலாளர் திரு.நெல். ஜெயராமன், தமிழக விவசாயிகள் நல சங்கத்தின் தலைவர் திரு.க. சேதுராமன், தமிழக காவேரி விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் திரு.த. புண்ணியமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் **இன்று (5.6.2018) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து காவேரி பாசன**

**விவசாயிகளின் ஒட்டுமொத்த மகிழ்ச்சியையும், தங்களது மனமார்ந்த நன்றியினையும் தெரிவித்துக் கொண்டனர்.**

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 5.6.2018**